Regstered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (9-4-66) இதழ் 61

விசுவாவசு பங்குனி 27 துல்ஹஜ் பிறை 17 சனிக்கிழமை

பீடிகளில் சிறந்தது!

பீடி உலகில் சிறந்து விளங்குவது முல்லா பீடிகளே

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:

முல்லா பீடி கம்பனி

கே.கே.எஸ. ரோட் - யாழ்ப்பாணம்.

## எம். பி. யின் முயற்சி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

பருத்தித்துறையிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக் கிளையை மூடுவதற்கு எடுத்த நடவடிக்கை பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் எடுத்த முயற்சியால் நிறுத்தப்பட்டுவிட்டது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி

# பொதுக்காரியதரிசி பிரஸ்னேவ்

## சமாதான சகவாழ்வுகொள்கை மீண்டும் வலியுறுத்து

### 23-வது மகாநாடு முடிவடைந்தது

மாஸ்கோ, ஏப்ரல் 8

**சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுக்காரியதரிசி பதவிக்கு திரு. பிரஸ்னேவ் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்டாலின் காலஞ் சென்ற பிறகு புறக்கணிக்கப்பட்டிருந்த இப்பதவி மீண்டும் புதுப்பிக்கப் பட்டிருக்கின்றது.**

மாஸ்கோவில் இன்று முடிவடைந்த கம்யூனிஸ்ட் கட்சியின் 23-வது மகாநாட்டில் சமாதான சகவாழ்வு கொள்கையை ரஷ்யா தொடர்ந்து கடைப்பிடித்து வரும் என்று திரு. பிரஸ்னேவ் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

மாஸ்கோவில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வந்த கம்யூனிஸ்ட்கட்சியின் 23-வது மகாநாடு இன்று முடிவடைந்தது. இம்மகாநாட்டில் சுமார் 86 நாடுகளைச் சேர்ந்த 5 ஆயிரம் பிரதிநிதிகளும் பிரமுகர்களும் கலந்துகொண்டார்கள்.

அடுத்த 5 ஆண்டுகளில் ரஷ்யா பின்பற்றவிருக்கும் பொருளாதாரத்திட்டமொன்றும் இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 11 பேர் கொண்ட அரசியல் பீடமொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

திரு. பிரஸ்னேவ் மகாநாட்டில் பேசுகையில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நாட்டின் அரண்களைப் பலப்படுத்தவும் ஸ்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்.

தென் வியட்னும் கொந்தளிப்பு சம்பந்தமாகவும் மாகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தென் வியட்னுமுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதென்று முடிவு செய்யப்பட்டதுடன், அங்கிருந்து அமெரிக்காவை வெளியேறும் படியும் வற்புறுத்தப்பட்டது.

சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் உட்பட மற்றைய முக்கிய தலைவர்கள் நிர்வாகக் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திரு. மிக்கோயன் நிர்வாகக் குழுவின் பூரண அங்கத்தவராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

## தேசியசுவீப் முடிவுகள்

கொழும்பு. வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

01 X 0826 ரூ. 36,300

இரண்டாவது பரிசு

08 N 0840 ரூ. 14,520

மூன்றாவது பரிசு

14 T 0904 ரூ. 3, 630

(6-ம் பக்கம் பார்க்க)

## தென். வியட்னும் பிரதமர்மீது அவநம்பிக்கை

### முதலாவதுராணுவதலைமை அதிகாரி அறிவிப்பு

சைகோன், ஏப். 8

தென்வியட்னுமில் 5 மாகாணங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் முதலாவது ராணுவத் தலைமையின் சிரேஷ்ட அதிகாரிகள் பிரதம மந்திரி ஏர் மார்ஷல் கைக்கு அளித்த ஆதரவை வாபஸ பெற்றுக் கொண்டுவிட்டார்கள். இத்தலைமை டாறுங்கில் இருக்கிறது.

இன்று காலை அவர்கள் கூடி பிரதமர் கையின் அரசாங்கத்தின்மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை வெளிப்படுத்திக்கொண்டார்கள்.

அரசாங்கத்துக்கு விஸ்வாசமான விமானப்படை இன்று டாறுங்மீது பறந்து பலத்தை உணர்த்துவதற்காக இங்கு தாக்குதல் நடத்தியது. ஆனல் அமெரிக்காவிடம் தங்களுக்கு விஸ்வாசம் உண்டு என்பதை அவர்கள் அறிவித்தார்கள்.

அதே சமயம் அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் கை அரசாங்கத்தின் மீது தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகக் கூறியது.

தென்வியட்னும் அரசாங்கத் துருப்புக்கள், இன்று பிரதான பௌத்த ஆலயத்தில் கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்து ஆர்ப்பாட்டங்களைக் கலைத்தனர்.

தென்வியட்னுமில் பிரதமர் கையின் ராணுவ அரசாங்கத்துக்கு எதிராக பௌத்தர்களும், மாணவர்களும் ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள். விரைவில் சிவில் அரசாங்கம் ஒன்றை நிறுவவேண்டும் என்றும், புதிய அரசியல் அமைப்பு ஒன்றின்கீழ் தேர்தல் நடைபெறவேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

## ஆழ்கடலில் உலோக பொருள் ஆராய்ச்சி

### இலங்கையும் பயனடையும்

கொழும்பு, சனி

இலங்கையைச் சுற்றியுள்ள கடலிலும், பசுபிக்- இந்து சமுத்திரங்களிலும் ஆழ்ந்து கிடக்கும் உலோகப் பொருட்களைக் கண்டுபிடிக்க நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகள் மூலம் இலங்கையும் பயன் அடையும் என்று கருதப்படுகின்றது.

இந்த ஆராய்ச்சி முயற்சிகளின் ஒரு அம்சமாகவே சில காலத்துக்குமுன் இந்தியாவில் மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கையில் கலரயோரப்பகுதிகளிலும் இம்மாதிரி எண்ணெய்ப் படிவங்களிருப்பது பற்றி ஆராய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கவர்னர் சம்பளம் குறைக்கிறார்

பெங்களூர், ஏப். 8

மைசூர் கவர்னர் திரு. வி. வி. கிரி, 1967-ம் ஆண்டு மார்ச் மாதம்வரை தமது மாதாந்தச் சம்பளத்தில் 500 ரூபாய்களைக் குறைத்துக்கொள்ள விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

## பால்நிலையம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், சனி

கொழும்பிலுள்ள பால சபையிலிருந்து சில உயர்தர அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் ஒரு பால்நிலையம் அமைப்பதற்காக இங்கு வந்து விசாரணைகள் நடாத்திச் சென்றுள்ளனர். (நி. நி.)

## நாடுமுழுவதிலும் மரக்காலைகள் நிறுவப்படும்

கொழும்பு, சனி

நாடு பூராவிலும் மரக்காலைகள் நிறுவுவதற்கான சில நடவடிக்கைகளை காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி சில்வா மேற்கொண்டிருக்கின்றார்.

இதுவிஷயமாக மாவட்டங்கள் தோறும் விவசாயக் கமிட்டிகளின் கூட்டங்களைக் கூட்டி ஆலோசிக்கும் படியும் அக்கமிட்டிகளின் சிபாசுகளைக் கோரும் அரசாங்க அதிபர்களுக்கு மந்திரி உத்தரவிட்டிருக்கின்றார். கள்ளத்தனமாக மரங்களை வெட்டி கடத்தி செல்லும் வாகனங்களைக் கைப்பற்றவும் மந்திரி ஏற்பாடு செய்துள்ளார்.

உதைபந்தாட்டம்

## பர்மா வென்றது

கொழும்பு, சனி

பர்மா உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நேற்று சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை ஒரு கோலும், பர்மா மூன்று கோலும் போட்டன.

கொள்ளுப்பிட்டி, வெள்ளி

அவசரகாலநிலை மேலும் ஒருமாதகாலத்துக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

## பிரதமர் தலைமையில் மேதினக் கூட்டம்

### தமிழரசு, காங்கிரஸ் தலைவர்களும் கலந்து கொள்வர்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்தைச் சேர்ந்த சகல அரசியல்கட்சிகளையும் சேர்ந்த தொழிற்சங்கங்களும் ஒன்றுசேர்ந்து மேதினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இதனையொட்டி கால்பேஸ் மைதானத்தில் மே முதல் திகதியன்று நடைபெறவிருக்கும் கூட்டத்துக்குப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தலைமை தாங்கவிருக்கிறார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த சுமார் 5,000 தோட்டத் தொழிலாளர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

சுகததாசா மைதானத்திலிருந்து கால்பேஸ் மைதானம்வரை ஒரு பெரும் ஊர்வலத்தை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெளி யூர்களிலுள்ளவர்

(6-ம் பக்கம் பார்க்க)

நகைகளுக்கு யப்பான் ஜுவலர்ஸ்

64, கன்னாதிட்டி.

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 518. தந்தி: 'யப்பான்'

The Jaffna Co-operative Stores Ltd.

420, Hospital Road, :: :: Jaffna

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

C. W. E. புடவைகள் கூப்பனுக்கு எங்களிடம் கட்டுப்பாட்டு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நமது ஒவ்வொரு கெட்ட காரியமும், கெட்ட சொல்லும், கெட்ட எண்ணமும் இயேசுவைச் சிலுவையில் அறையும் ஆணியாகும். பிரார்த்தனை மன்றாட்ட மூலம் இறையருள் பெற்று மனத் தூய்மை அடைந்தவர் உள்ளத்திலே புனிதன் இயேசு மீண்டும் உயிர்த்தெழுந்து பிரகாசிப்பார்.

—ஒரு கிறிஸ்தவப் பெரியார்.


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு பங்குனி மீ 27 உ (9-4-66)


## சுதேசி வாரம்

இப்பொழுது அனுஷ்டிக்கப்பட்டுவரும் சுதேசி வாரத்தையொட்டி பதில் கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. ஷெல்டன் ஜயசிங்கா விடுத்துள்ள ஒரு செய்தியில் உள்நாட்டுக் கைத்தொழில்களை வளர்ப்பதும் உள்நாட்டுப் பொருள்களை உபயோகிப்பதற்கு மக்களைத் தூண்டுவதும் இந்த வாரத்தின் நோக்கமென்றும் இதற்காகப் பொதுக்கூட்டங்கள் உள்நாட்டு உற்பத்திப் பொருட்காட்சிகள் நாடு முழுவதும் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்தநோக்கமும் முயற்சியும் ஒரு வாரத்துடன் நின்றுவிடக் கூடாது. எனினும் இந்த ஒரு வார சுதேசி இயக்கம் கூட யாழ்ப்பாணப் பகுதியில் இப்பொழுது நடைபெறுவதாகத் தெரியவில்லை.

உள்நாட்டில் பொருள்களை உற்பத்திசெய்வதன் மூலமும் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களை உபயோகிப்பதன் மூலமும் தேசிய விழிப்புணர்ச்சியையும், தேச பக்தியையும், தேசிய ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த முடியும். இதனால்தான் இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்த பொழுது அதில் ஓர் அம்சமாக சுதேச இயக்கத்தையும் கதர் இயக்கத்தையும் ஆரம்பித்து அந்நிய துணி பகிஷ்கார இயக்கத்தையும் காந்திஜி ஆரம்பித்தார். இலங்கை அந்நியராட்சியின்கீழ் இருந்த பொழுது அவர்கள் தேசியநலனைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. இந்த நாட்டை தங்களின் நலனுக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றியே அவர்கள் அக்கறை கொண்டிருந்தனர். இலங்கை அரசியல் சுதந்திரம் பெற்றபின்னரும் கூட அந்நியரின் உதவியையும் அந்நியநாட்டுப் பொருள்களையுமே நாம் நம்பியிருந்தோம் 1956ம் ஆண்டுக்குப் பின்னரும் 1960-ம் ஆண்டுக்குப்பின்னரும் இந்த நிலையில் சிறிது மாற்றம் ஏற்பட்டு தேசிய உணர்ச்சியும் சுதேசிப் பற்றும் ஒரு பிரிவுமக்கள் மத்தியில் தோன்றியது. இதற்கு அப்போது ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த பாரபட்சமான கொள்கைகளே காரணம். அரசியல் காரணங்களுக்காக நாட்டில் தோன்றிய விழிப்புணர்ச்சியை அன்றைய அரசாங்கங்கள் தேசிய ரீதியில் வழிகாட்டத்தவறிவிட்டனர்.

இன்று தேசிய அரசாங்கம் ஆட்சிபீடத்திலிருக்கிறது. சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் ஆகிய சகல பிரிவினரினதும் ஆதரவையும் நம்பிக்கையையும் அது பெற்றிருக்கிறது. இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேசிய விழிப்புணர்ச்சியையும் சுதேசி மனப்பான்மையையும் அரசாங்கம் உருவாக்கவேண்டும். இதற்கு இச்சுதேசி வாரம் வழிகாட்டுவதாக இருக்க வேண்டும்.

வடபகுதியில் நாட்டுக்குத் தேவையான பல பொருள்களை உற்பத்தி செய்வதற்கானமூலவளங்களும் உழைப்புத்திறன் மிகுந்த மக்களும் இருக்கின்றனர் முன்னைய அரசாங்கள், அரசியல் காரணங்களுக்காக இப்பகுதிகளைப் புறக்கணித்தது போன்று தேசிய அரசாங்கமும் அதேதவறைச் செய்யக்கூடாது.

## பொலிஸ அதிபரின் வேண்டுகோள்

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைத் தடுக்கவும் குற்றச் செயல்களுக்குப் பொறுப்புள்ளவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனைபெற்றுக்கொடுக்கவும் பொதுமக்கள், பொலிசாருக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென பொலிஸ் அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். நியாயமான இந்தக் கோரிக்கைக்குப் பொதுமக்கள் ஆதரவளிப்பார்களென நம்பலாம்.

ஆனால் பொலிசார்சிலர் பொதுமக்களுடன் அநாவசியமாகக் கடூரமான முறையில் நடந்துகொள்வதும் வழக்கு விசாரணைகள், பொலிஸ் அதிகாரிகள் சிலரது அசிரத்தையினால் தவணையும் தவணைக்குமேல் தவணையுமாக விணுகக் காலதாமதமேற்படுவதும், பொலிசாருக்குப்பொதுமக்கள் பலவிஷயங்களில் ஒத்துழைப்பு அளிக்காமலிருப்பதற்குக் காரணமாகும். அந்நிய ஆட்சிக்காலத்தில் பொலிசாரும் இராணுவத்தினரும்பொதுமக்களை அடக்கி வைப்பதற்காக பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இன்று நாடு சுதந்திரமடைந்துவிட்டது. நாட்டுமக்களுக்குப் பாதுகாப்பளிப்பதுதான் பொலிஸாரின் முக்கிய கடமையாகுமென்பதைப் பொலிசார் உணரவேண்டும். நாட்டில் குற்றச் செயல்களைத் தடுத்து அமைதியாகவாழ்வதற்கு ஒத்துழைப்பும் உதவியும் அளிக்கவேண்டியது நாட்டுமக்கள் அனைவரினதும்கடமையும் பொறுப்புமாகும். இதே சமயம் பொதுமக்களினது உதவியையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டுமானால் பொலிசாரும் தமதுபோக்கில் மாறுதல் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஐ நா. ஏப், 8

ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் வருகிற 27-ம் திகதி லண்டனில் பிரிட்டிஷ் பிரதமருடனும், 30-ம் திகதி பாரிசில் ஜெனரல் டிகாலுடனும் விருந்துண்பார் என அறிவிக்கப்பட்டது

(பி டி ஸி)

## ஆண்டறுபது கண்ட அறிஞன்

— செந்தமிழ் மணி பொன். கிருஷ்ண பிள்ளை —

தந்தை மைந்தனுக்குச் செய்யவேண்டிய உதவியையும், மைந்தன் தந்தைக்குச் செலுத்தவேண்டிய நன்றிக்கடனையும் தெள்ளிதாக வள்ளுவர் விளக்கிப் போந்தார். சுவாமிநாதையர் கி. வா ஜகந்நாதனவர்களுக்கு ஞானத்தந்தையுஞ் சிறந்த குருவுமாவர் கி.வா ஜ. அவர்களோ அவருக்கு ஞான புத்திரனாய்ச் செலுத்த வேண்டிய நன்றிக்கடனை நன்முறையிற் செலுத்தும் மைந்தனும் சீடனுமாக அமைந்துள்ளார். குருவின் பெருமையாற் சீடனும், சீடனின் ஞான ஒழுக்கச் சிறப்பாற் குருவும் என்றும் பொன்றாப் புகழ் பெறுவர். இவ்வகையிற் சுவாமிநாதையரும் ஜகந்நாதனும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமையை நன்முறையிற் செய்துமுடித்து இலங்கும் பாக்கியவான்கள்.

கி. வா.ஜவுடைய குருபக்தி அவர்தஞ் செவ்விய உரைகளைச் செவிமடுத்தோரனைவரும் நன்கறிந்ததொன்றே. எக்கூட்டத்திலும் கி வா.ஜ அவர்கள் முருகனைப் போற்றுந் தம் வாயாலே தம் குருநாதனையும் துதியாற் போற்றுவதற்குத் தவறவேமாட்டார்.

ஒரு சமயம் அன்பர் சிலருடன் சுன்னாகத்திலிருந்து கதிர்காமத் திருத்தலத்துக்குக் கி.வா ஜ சென்றார். அவருடன் சென்றவர்களில் அடியேனும் ஒருவன். காலை ஒன்பது மணிக்குச் சுன்னாகத்திலிருந்து புறப்படுவதாகஏற்பாடு. மணி பதினொன்றாகியும், நேரத்தைப் பொன்னே போற் போற்றும் கி.வா. ஜ அவர்கள் வந்திலர். பன்னிரண்டு மணிக்குமேல் அவசரமவசரமாக வந்துசேர்ந்த கி வா.ஜ, தாம் காலதாமதஞ் செய்யநேர்ந்ததற்கான காரணத்தைத் தெரிவித்ததும் அனைவரும் விம்மிதமுற்றவர்களாய் அப்படியே அசந்தேபோனோம். கதிர்காமத்திலிருந்துகொழும்பு சென்று பின் அங்கிருந்து தாய்நாடு புறப்பத் தாம் எண்ணியமையினால், இலங்கையிலே தவறாது தாம் தரிசிக்கவேண்டிய பெரியாரொருவரிடம் சென்றமையினாலேயே காலதாமத மாகிவிட்டதென்று கி.வா.ஜ தெரிவித்தார். அவர்தவறாது தரிசிக்கவேண்டியிருந்த பெரியார், தமிழ் வளர்த்த அகத்தியமகாமுனிவர்போலத் தமிழ் இலக்கணத்துக்கு உரை கண்டு அதன் வளர்ச்சிக்கு ஆவன செய்துகொண்டிருந்த வருத்தலைவிளான் கணேசமாமுனிதான் கணேசமுனிவரைக் காணுந்தோறுந் தங்குருநாதனையே காண்பது போன்ற உணர்ச்சி தமக்கு ஏற்படுவதாக அடிக்கடி கி. வா.ஜ கூறுவார்.

யாழ்ப்பாணத்திலே பெரியதொரு மகாநாடு. அம் மகாநாட்டிலே கலந்து கொள்வதற்காகக் கி.வா. ஜ அவர்கள் விமான மூலமாக பலாலி வந்தடைந்தார். பல பெரியார்கள் கி.வா. ஜவை வரவேற்பதற்காக மோட்டார்வண்டி முதலிய வசதியான சாதனங்களில் வந்திருந்தார்கள். விமானத்திலிருந்து இறங்கும்போதேஒரு பெரியவர் நல்ல வெய்யிலிலே குடையுடன் வருவதைக் கி வா. ஜ கண்டார். அன்பருடன் அளவளாவிக் கொண்டிருந்த கி. வா. ஜ அப்பெரியார் மகா வித்துவான்கணேசையரென்பதையறிந்ததும் ஓடோடிச் சென்றுபேரன்புமீதூர அவர் அங்கு வந்த காரணத்தை விசாரித்துத்தம்மைக் காணவே அவர் அத்துணை ஆவலுடன் வந்திருப்பதைத் [illegible] தானே வலியச் சென்று [illegible] அப்பெரியார் தம்மைக்காண வந்திருந்த பெருந்தன்மையை நோக்கி, உளங்கசிந்துவணக்கஞ் செலுத்தி உபசரித்தார். இரத்தினவியாபாரிக்கன்றோ இரத்தினத்தின் பெருமை தெரியும். காக்காய்ப்பொன் வியாபாரிக்கு இரத்தினத்தை மதிப்பிடுந் தகுதியேது.

மேலைநாடுகளிலே வேதாந்த தத்துவத்தைப்பரப்பத் தம் வாழ்நாளிற் பல வருடங்களைச் செலவழித்தவர் பெரும்பேராசான் மாக்ஸ் முல்லர். (மோக்ஷமூலபட்டர் என்று விவேகானந்தர் இவரை விதந்துகூறுவர்.) பெரும் புகழுடன் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து சென்ற வேதாந்த சிங்கம் ஒக்ஸ்போர்ட என்னும் கோதீர்த்தபுரியில் மாக்ஸ் முல்லரைச் சந்தித்தது. பிரிந்து செல்லும்போது விவேகானந்த சுவாமிகளைப்புகைவண்டியிலே ஏற்றுவதற்காக மாக்ஸ் முல்லர் பின் தொடர்ந்தார். வயது சென்ற அந்தப்பெருந்தகை தமக்காக இத்துணைக் கஷ்டமுறுவதேனே என்றுசுவாமிகள் மனமுருகிக் கேட்டபோது, பரமஹம்ஸ தேவ திவ்யசிட தரிசனம் வாழ்க்கையில் அபூர்வமாகக் கிட்டுவதொன்றென்றுபதிலளித்தார் வேதாந்த மாமுனிவர் இதனைச் சுவாமிகளே எழுதியுள்ளார்கள். கணேசையரையும், கி வ. ஜவையும் நினைக்கும்போது இந்த நிகழ்ச்சியும் நம் மனக்கண்முன் தோன்றுகின்றது. 'வலிதன்றே தாழுந்துலைக்கு' என்ற மகாவாக்கியம் எத்துணை உண்மையைத் தன்னகத்தடக்கியுள்ளது. இலக்கணக் கடலுந் தமிழ்க்கடலும் சந்திக்கநேர்ந்த சந்தர்ப்பம் எம்மனத்தெழுப்புகின்ற காட்சி பெரியார் மாட்சியைத்தான் நம்மனக்கண் முன் நிறுத்துகின்றது. கி. வா.ஜ அவர்கள் தாய்நாடு செல்லும் போதெல்லாம் தங்குருவைத் தொழுவது போலவே முனிவர்பாதங்களையும் தீண்டி இன்புறுவது வழக்கம்.

கதிர்காமத்துக்குச் செல்லும் வழியில் யாழ்ப்பாணத்திலே தமிழையும் சைவத்தையும்வளர்த்த பெரியோர்களைப்பற்றி வாயாரமனதார வழுத்தி அடியேன் உள்ளத்தையும் கவர்ந்தார் கி.வா. ஜ அவர்கள். வேலணையிலே மூன்றுநாள் நிகழ்ந்த திருமுறைவிழாவிலே ஒரே விஷயத்தைபற்றி மூன்றுநாளுந்தொடர்ந்து "நூனியிற் கரும்பு தின்றெனச்" சொற்பொழிவாற்றிய பண்டிதமாமணி கணபதிப்பிள்ளையைப் பற்றி உளத்தூய்மையுடன் பலவாறுகப் புகழ்ந்து கூறினார்கள். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களுடைய பேச்சும் அதனிடை இயற்கையாகவே எழுந்தது. புலவர்களைக் கி.வா.ஜ அவர்கள் எத்துணைத்தூரம் மதித்திருந்தாரென்பதை நாம் கண்டோம். ஒழுக்கத்தாலுயர்ந்த கல்வியாளரைக் கி. வா.ஜ என்றுமே போற்றத் தவறமாட்டார்.

பாரியின் ஈகைச்சிறப்பாற் பெரிதுமீர்க்கப்பட்டவர், அவன் உயிரனைய நண்பர் கபில அந்தணாளர். பாரியினுடைய சால்பை,

"மால்புடை நெடுவரைக்
கோடுதோறிழிதரும் நீரினு
மினிய சாயல்
பாரி"..." என்று என்றும்

பொன்றாச் சிறப்புடன் கபிலர் மொழிந்துள்ளார். பாரியின் நாட்டின் இனியநீர்தான் அவன்சால்பை விளக்கக் கபிலர் பெருமானுக்குக் கைதந்துதவிற்று. எவரைப்பற்றியும் எள்ளளவும் தூற்றாத-நல்லவர் பண்புகளை அளந்தறிந்து அவரவருக்குச் செலுத்தவேண்டிய மதிப்பைச் செலுத்தத்தவ

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதியது

செல்வி விஜயபாரதிதான் அண்ணாமலையிலே என் மனதைப் பெரிதும் கவர்ந்தவராவார். அவர் யார் தெரியுமா? மகாகவி பாரதியார் அவர்களின் புதல்வி தங்கம்மா பாரதியின் புதல்வியார், எம். ஏ பட்டம் பெற்றவர். இப்போது அண்ணாமலையிலே தமது பாட்டனாரின் பாடல்களைப்பற்றி விசேஷ ஆராய்ச்சி செய்து வருகிறார். இதற்காக இந்திய அரசாங்கம் அவருக்கு மாதம் 300 ரூபாய் உதவியளித்து வருகின்றதாம். இதைப் பார்க்க அமரர் பாரதியாரின் ஆத்மாவுக்கு எவ்வளவு இன்பமளிக்கும்!

ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் செல்வி பாரதி மிக இனிமையான குரலில் துதிப்பாடல் பாடினார். இன்னும் பாட மாட்டாராஎன்று தோன்றியது திருக்குறளின் முதல் அதிகாரத்திலே கடவுள் வாழ்த்துள்ளதல்லவா? அதில் 5 குறள்மணிகளுடன் கூடிய கீர்த்தனையே பாடப்படுகின்றது. மறுநாள் நூல்நிலைய ஆண்டுவிழாவிலே விஜயா, பாரதியாரின் பாடலிலிருந்து ஒன்றைப் பாடியபோது என் உடல் புல்லரித்தது. மலாயாவில் நடைபெறும் தமிழ் ஆராய்ச்சி விழாவுக்கு தமிழகத்திலிருந்து அவரையும் அழைத்திருக்கின்றார்களாம். விழா முடிந்தபின் அவர் இலங்கை வழியாக இந்தியா திரும்புவதாயும் ஈழத்தைப் பார்க்க விரும்புவதாயும் தெரிவித்தார். மலாயா மகாநாட்டிலிருந்து திரும்பும்பல தமிழ் அறிஞர்களும் அப்போது இலங்கை வரலாமென்று அறிந்தேன். யாழ்ப்பாணத்துக்கு இது நல்லதோர் 'சான்ஸ்'.

'டப்பாப் பாட்டுகள்' பரவிவரும் இக்காலத்திலே தூய்மையான கர்நாடக இசையை அண்ணாமலை பேணிக்காத்து வளர்த்து வருவதை உடுப்பிட்டியார் அங்கு ஒரு கூட்டத்திலே பாராட்டிப் பேசினார். சற்று நேரத்துக்கெல்லாம் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன. மேலான இசையைக் கேட்கலாமென்று ஆவலுடன் இருந்தேன். ஐரோப்பிய முறையிலே ஒரு மாணவ கோஷ்டியின் வாத்திய நிகழ்ச்சிகள் நடந்தன. எல்லாம் 'டப்பா சங்கீதம்'தான். எப்படி இருக்கும்!

ஏன் இப்படி என்று விசாரித்ததில், அந்த மாணவர்கள் இதைத்தான் விரும்புவதாயும், கர்நாடக இசை நிகழ்ச்சிகளாயின் கைதட்டி கலைத்து விடுவரென்றும் தெரிவித்தனர். சில மாதங்களுக்கு முன் ஒரு பிரபல பரதநாட்டியக் கச்சேரிக்கு பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு செய்தார்களாம். சென்னையிலிருந்து அப்பெண்மணி தன் கோஷ்டியுடன் வந்து நடனமாட ஆரம்பித்ததும், மாணவரில் சிலர் சேர்ந்து கூச்சலிட்டு கச்சேரி நடைபெறுமலே தடுத்துவிட்டதாயும், பேசிய பணத்தை அக்கலைஞருக்குக்கொடுத்து அனுப்பவேண்டியதாயிற்றென்றும் அறிய மிகமிக ஏமாற்றமாக இருந்தது. உலகமெல்லாம் போற்றும் பரதநாட்டியக்கலைக்கு தமிழக சர்வகலாசாலையில் இடமில்லையா? தமிழிசையை மிகப் பாடுபட்டு வளர்த்த அண்ணாமலை அரசருக்கு மாணவர் செய்யும் கைமாறு இதுதானா? மேடையிலே ஒரு திரையில் ராஜா சர் அவர்களின் உருவப்படம் இருந்து இவற்றை எல்லாம் பார்த்து வந்தது! தாம் ஆரம்பித்த

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொடீஷியாவுக்கு

# 'எண்ணெய் கப்பல்களை தடுக்க பலாத்காரத்துக்கு அனுமதிதருக'

# பாதுகாப்புசபையைக் கூட்ட பிரிட்டன் வேண்டுகோள்

## லிஸ்பன் பேச்சுக்கள் முறிவு

### ஏற்கனவே சென்ற எண்ணெயை தடுக்க முடியாதாம்

நியூயோர்க், ஏப். 8

ரொடீஷியாவுக்கு எண்ணெய் சப்ளையுடன் செல்லும் கப்பல்களைத் தடுக்க பலாத்காரத்தை உபயோகிக்க அனுமதி தரும்படி பிரிட்டன் ஐ. நா. பாதுகாப்பு சபையைக் கோரியிருக்கிறது.

இது சம்பந்தமாக பாதுகாப்பு சபை உடனடி விசேஷ கூட்டத்தை நடத்தவேண்டும் என பிரிட்டன் கேட்டுள்ளது.

அதேசமயம் ரொடீஷிய எண்ணெயை பகரா துறைமுகத்தில் இறக்காமல் தடுப்பது சம்பந்தமாகப் பிரிட்டிஷ் மந்திரிக்கும், போர்த்துக்கல் அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்கள் எவ்வித பயனுமின்றி முறிந்து விட்டன.

பாதுகாப்பு சபை அவசரமாகக் கூடவேண்டும் என பிரிட்டன் கேட்டுக்கொண்டும், இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை சபைக்கூட்டம் நடைபெற வில்லை.

ரொடீஷியாவுக்கு எண்ணை சப்ளைக் கப்பல்கள் மேலும் செல்வதைத் தடுக்குமாறும், ஏற்கனவே சென்று கொண்டிருக்கும் கப்பல்களை திருப்பி விடுமாறும் உலகநாடுகளை பாதுகாப்பு சபை கேட்டுக் கொள்ளவேண்டும் என பிரிட்டன் கோரியிருக்கிறது.

தற்போதைய நிலைமை அமைதிக்கு ஆபத்தை விளைவிப்பதாய் கருதும்படி கோரும் தீர்மானம் ஒன்றையும் பிரிட்டன் சமர்ப்பித்திருக்கிறது.

மொஸாம்பிக் துறைமுகங்களில் ரொடீஷிய எண்ணெயை இறக்கவேண்டாம் எனப் போர்த்துக்கலுக்கு உத்தரவிடும்படியும் சபையிடம் அது கோரியுள்ளது.

ஆனால் பிரிட்டனின் நோக்கம் பற்றி தங்களுக்கு அந்தரங்கமாக விளக்கப்படும் வரை, பாதுகாப்புசபைக் கூட்டம் நடைபெறுவதை ஆசிய, ஆபிரிக்க, கம்யூனிஸ்ட் நாடுகள் எதிர்க்கின்றன.

பிரிட்டிஷ் பிரதிநிதி கெலகன் பிரபு நேற்று பாதுகாப்பு சபைத் தலைவரைச் சந்தித்துப் பேசினர். ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுடனும் அவர் பேசினர். அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பர்க் யுதாண்டைச்சந்தித்தார்.

இதற்கிடையில் ஏற்கனவே பகரா துறைமுகம் சென்றுள்ள எண்ணெய் ரொடீஷியாவுக்குச் செல்லாமல் தடுப்பது அசாத்தியம் என அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு சபையைக் கூட்டுவது விஷயமாக ஆபிரிக்க நாடுகளின் கருத்தைப் பிரிட்டனும், அமெரிக்காவும் எதிர்த்துள்ளன.

பிரிண்டனிலுள்ள எண்ணெய் சப்ளை கம்பெனியின் 4 டைரக்டர்களில் 3 பிரிட்டிஷ் டைரக்டர்கள் நேற்று லண்டனுக்கு வந்திருக்கிறார்கள்.

ரொடீஷியாவுக்கு எண்ணெயுடன் செல்லும் இரண்டாவது கப்பல், பகரா துறைமுகம் செல்லாது என அறிவிக்கப்பட்டிருப்பதாய் கிரேக்க வெளிநாட்டு அமைச்சகம் தெரிவித்தது.

---

## 'பிரசாரத்துக்கு அற்ப தகராறு'

நியுயோர்க், ஏப்ரல் 8

ஸியால்கோட் பகுதியில் ஒரு சிறு துண்டு நிலத்தை பாகிஸ்தான் பிரசாரநோக்கத்துக்காகப் பயன்படுத்தி வருகிறது என இந்தியா ஐ. நா வுக்குத் தெரிவித்திருக்கிறது

இந்த அற்ப தகராறை டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின் கடும் மீறலாக அது கூறியுள்ளதென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலத்தின் பரப்பு 26 ஏக்கர் தானும்.

---

## ரொடீஷிய 'கைதிகள்'

நியுபோர்க், ஏப். 8

ரொடீஷியாவில் 1,100 பேர் நீண்டகாலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் தொடர்ச்சியாக முப்பது நாட்கள்வரை காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனராம்.

இதுபற்றி சர்வதேச காருண்ய இயக்கத்தலைவர் திரு. பீட்டர் பெனென்லின் தெரிவிக்கையில், ரொடீஷியாவில் ஏராளமானவர்கள் பல்வேறு காரணங்களுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்என்று கூறினர்.

'உலகில் சுமார் பத்துலட்சம் அரசியல், மதத்தலைவர்கள்சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். இவர்களில் அரைவாசிப்பேர் தென்கிழக்காசியாவைச் சேர்ந்தவர்கள்' என்றும் அவர் தெரிவித்தார். (பி. டி .ஸி.)

---

## கல்கத்தாவில் பொலிஸ் சூடு

கல்கத்தா, ஏப்ரல் 8

கல்கத்தாவின் வடபகுதியில் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தைத் தாக்கிய காலிக்கும்பல்கள் மீது இரு தடவை பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்.

இதில் நால்வர் மாண்டனர். 16 பேர் குண்டுக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

157 பேர் கைதுசெய்யப்பட்டார்கள்.

உணவு இயக்கத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை [illegible]

---

# பௌத்த தலைவர்கள் போராட்டத்தை விலக்கினர்

## ஆனல் வியட்னும் மாணவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

சைகோன், ஏப். 8

அரசாங்கத்துக்கெதிரான போராட்டத்தை விலக்கிக் கொண்டுவிட்டதாய் பௌத்த தலைவர்கள் அறிவித்த பின்பும், நேற்றிரவு சைகோனில் பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள்.

அமெரிக்க, அரசாங்க விரோத சுலோகங்களை அவர்கள் கோஷித்தார்கள். ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப்பட்டது.

டனங்கில் பதற்றநிலை அதிகமாகக் காணப்பட்டது. ஹூவே நகரிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

சிவில் அரசாங்கம் அமைக்கப்படுவதைப் பொறுத்திருந்து பார்க்குமுகமாகவே பௌத்த தலைவர்கள் போராட்டத்தை விலக்கிக் கொண்டிருக்கிறார்கள்,

நேற்று தென்வியட்னமில் நடைபெற்ற இரு சண்டைகளில் 87 வியட்காங்கியர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வியட்காங்கியர் தங்கள் வசமிருந்த சிறைக்கைதிகள்மீது மெஷின் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது காரணமாக 25 கைதிகள் இறந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

மாஸ்கோ, ஏப். 8

'கொஸ்மோஸ் 114' என பெயர்கொண்ட மற்றொரு ராக்கெட்டை ரஷ்யா அனுப்பியிருக்கிறது. ([illegible])

---

## சீனுவுக்கெதிராக சீனர்கள் ஆர்ப்பாட்டம்!

ஜாகர்த்தா, ஏப்ரல் 8

வட சுமத்திராவிலுள்ள மேடால் நகரில் 20000 சீன இனத்தவர்களான இந்தோனேஷியர்கள், நேற்று பீகிங் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்கள்.

சீன தூதராலயம் முன்பிருந்த சீனக் கொடியை அவர்கள் பறித்து இந்தோனேஷிய கொடியை ஏற்றினர்கள்.

இந்தோனேஷியாவிலுள்ள சீனத்தூதரை வெளியேற்றும்படியும், சீனவுடனன ராஜதந்திர உறவை முறித்துக் கொள்ளுமாறும் அவர்கள் கோஷமிட்டார்கள்.

---

கடல் கொந்தளிப்பு இல்லாதிருந்தால்

# 12 மணி நேரத்தில் நீந்தியிருப்பாராம் சென்

## இருமுறை கடிக்கவந்த பாம்புகள்சுடப்பட்டன

தனுஷ்கோடி, ஏப். 8

பௌர்ணமிக் கடலின் கொந்தளிப்பு இல்லாதிருந்தால். நீச்சல் வீரர் சென் 12 மணி நேரத்தில் தனது இலக்கை அடைந்திருப்பார் என பாக்கு நீரிணை நீச்சலுக்குப்பின் பொறுப்பாய் இருந்த லெப்டினண்ட் சர்மா கூறினர்.

மாலையில் ஒரு தடவையும் நள்ளிரவு மற்றோர் தடவையும் கடற்பிராணிகள் அவரைத் தீண்ட வந்தன என்றார் சர்மா. "இருசமயங்களிலும் 5 அடி நீளமான நச்சுப்பாம்புகள் அவரை நோக்கி வந்தன. ஆனல் உரிய சமயத்தில் அவை சுட்டுவீழ்த்தப்பட்டன.

கஷ்டமான சமயங்களில் அவருடன் சேர்ந்து நீந்திய ஆழ்கடல்நீச்சல்காரர் லெப்டினண்ட் மார்ட்டிசுக்கு மீன்கடி காயங்களிலிருந்து இரத்தம் பெருகியது. மார்ட்டிஸ், இரு ஆயுதங்களைத் தரித்திருந்தார் என்றும் சர்மா கூறினர். கடல் இழுப்புக் காரணமாக அவர் 30 மைல் நீந்தவேண்டி ஏற்பட்டது

(பி டி ஐ — பி டி ஸி)

---

# ஐ. நா. திட்டக்கமிட்டிக்கு காமினி கொரியா நியமனம்

நியுயோர்க், ஏப். 8

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட கமிட்டிக்கு இலங்கைதேசிய திட்ட பொருளாதார விவகார நிரந்தக்காரியதரிசி டாக்டர் காமினிகொரியா உட்பட 17 நிபுணர்களை யுதாண்ட் நியமித்திருக்கிறார்.

ஐ. நா. சமூக, பொருளாதார சபையின் கீழ் இக் கமிட்டி இயங்கும்.

வருவற ஜுலை மாதம் சபையின் 41-வது மகாநாடு நடைபெறும். இதற்கிடையில் இடைக்கால அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கமிட்டி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது

அடுத்த மாதம் 2-ம் திகதி இரு வாரங்களுக்கு கமிட்டியின் கூட்டம் நியுயோர்க்கில் நடைபெறும்.

திரு. கொரியாவின் பதவிக்காலம் 3 ஆண்டுகளாகும்,

---

## இலங்கை பங்குபற்றும்

பாங்காக், ஏப். 8

பாங்காக்கில் நடைபெறவிருக்கும் சைக்கிள் பந்தையப் போட்டியில் இலங்கை, இந்தியா உட்பட 8 நாடுகள் பங்குபற்றிக்கொள்ளும்.

---

## அமெரிக்க அணுசோதனை

வாஷிங்டன், ஏப். 8

20000 டன் டி. என். டி. சக்திகொண்ட நிலத்தடி அணுகுண்டு சோதனை ஒன்று நெவாடாவில் நடத்தப்பட்டது. (பி டி ஸி)

---

## நடப்பு ஆண்டுக்கு ரூபா 2081 கோடி

புதுடில்லி, ஏப்ரல் 8

1966/67-ம் ஆண்டுகான திட்டம் பற்றி நேற்று அறிவிக்கப்பட்டது

மொத்த முதலீடு 2081 கோடி ரூபா. இதில் 1165 கோடி மத்திய அரசாங்கம் கொடுக்கும்.

580 கோடி ரூபா வெளி உதவிகிடைக்கும். 12 கோடி பற்றுக்குறை.

---

## பிராட்மன் ராஜினமா

சிட்னி, ஏப் 8

கிரிக்கெட் சரித்திரத்தின் மாபெரும் துடுப்படி வீரர் எனக் கருதப்படும் டொன் பிராட்மன் ஆஸ்திரேலிய கிரிக்கெட் தெரிவுசபைத் தலைவர் பதவியிலிருந்து ராஜினமா செய்துவிட்டார். (பி டி ஸி)

---

## ஹாங்காங்கில் கலகம்

ஹாங்காங், ஏப். 8

ஹாங்காங்கில் ஏற்பட்ட கலகத்தை அடக்குமுகமாக பிரிட்டிஷ் துருப்புக்கள், பொலிசாருக்கு உதவிபுரிந்தன. இதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

---

நியுயோர்க், ஏப். 8

ஐ. நா. நிர்வாகச் செலவு முன்பைவிட இப்போது இரண்டரை மடங்கு அதிகரித்துள்ளதாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவுபசாரம்

சாவகச்சேரி, வெள்ளி

மட்டுவில் தெற்கு சாந்த நாயகி வித்தியாசாலை ஆசிரியர் திரு. ஆ. வல்லிபுரநாதர் கச்சாய் அரசினர் பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றதையிட்டு அவருக்கு ஓர் உபசரணை சாந்தநாயகி வித்தியாசாலையில் நடைபெற்றது. இவ்வைபவத்தின்போது இப்பாடசாலைத் தலைமையாசிரியர் திரு க. உமாகேஸ்வரன் "ஒவ்வோர் ஊழியரும் இடம்பெயடும்போது அவரை உபசரிப்பது சக ஊழியரின் கடமையும் கௌரவமுமாகும் என்றும் அங்ஙனம் செய்யாதோர் கவறிழைத்தவராகவே கருதப்படுவர் என்றும் அது மிகவும் துக்கமான சம்பவம் என்றும் கூறினர், வேறுபலரும் பாராட்டுரை வழங்கினர்கள்.

## பொங்கல் திருநாள்

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் பழைய காட்டுவைரவர் கோயில் பொங்கல்திருநாள் இம்மாதம் 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை இரவு நடைபெறும். அடுத்த நாள் காலை பூசை இடம்பெறும்.

## அபின் சபை அங்கத்தவர்

யாழ்ப்பாணம், சனி

'அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத் தலைவரும்சுதேச வைத்தியக் கவுன்சில் சித்தவைத்திய பகுதி அங்கத்தவருமான வைத்தியாசாரி, அ. க. குமாரசாமி சுகாதார அமைச்சரால்யாழ்ப்பாணம் பகுதி அபின்சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின்பொதுச்சபைக்கூட்டம், நாளை காலை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

சம்மேளனத் தலைவர்திரு. ஜி. ஜி.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மேதினக் கொண்டாட்டம் சம்பந்தமான விஷயங்கள்பற்றி ஆலோசிக்கப்படு மென்றும் தெரிகிறது.

## நாதசுர கலாமணி

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரியைச் சேர்ந்த முருகப்பா பஞ்சாபிகேசனுக்கு, திருக்கேதீஸ்வர பங்குனி உத்தர உபயக்காரர், 'இசைவள்ளல் நாதசுர கலாமணி'' என்றதங்தப்பதக்கத்தையும், பத்திரத்தையும் வழங்கிக் கௌரவித்தனர்.

## அமைச்சர் 'திரு'வுக்கு வரவேற்பு

வல்லெட்டித்துறை,வெள்ளி

பருத்தித்துறை பட்டின சபை உள்ளூராட்சி அமைச்சர் திரு.எம். திருச்செல்வத்துக்கு வரவேற்பொன்றை அளிப்பதென சபையின் மாதாந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு பட்டின சபைத் தலைவர் திரு. என். நடராசா தலைமைவகித்தார்.


## பிரவேசங்கள்

ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம்,உயர்தரம் கலை/ விஞ்ஞானம், பிறெப்: விஞ்ஞானம் வகுப்புக்களுக்கு இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகள் உண்டு.

**ஐக்கியகலாசாலை**

நெல்லியடி, கரவெட்டி/
107, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
E

REGAL--JAFFNA
NOW SHOWING!
ROD CAMERON
RORY CALHOUN
in
THE GUN HAWK
(in Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
பாரத நாட்டின்
வீரபுத்திரன்
4-45க்கு மட்டும்
MY SIX LOVES

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ் ஆர். - விஜயகுமாரி
நடித்த
தெய்வத்தின் தெய்வம்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
புத்தாண்டு வெளியீடு
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(9 மாறுபட்ட வேடங்களில்)
சாவித்திரி
நடித்திருக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மிபிக்சேர்ஸ
நவராத்திரி
இசை: கே. வி மகாதேவன்
கதை, வசனம் ஏ. பி. நாகராஜன்


ஆசிரியருக்குக் கடிதம்

## இ. போ. ச. கவனிக்குமா?

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் 169, 170-ம் கட்டைக்கிடையில் இயக்கச்சி என்னும் இடமுண்டு, இவ்விடத்திற்கு யாழ்ப்பாணம் இருந்து வரும் பஸ் வண்டிகளும் அனுராதபுரம், திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, முறிகண்டி ஆகிய கடுகதிகளும் இதைவிட சாதாரண போக்கு வரத்து பஸ்களும் இவ்விடத்தில் நிற்பாட்டி பொது சனங்களின் பிரதான தேவையைப் பூர்த்தி செய்யாதது பெரும் வேதனைக்குரியது. இதே நிலையத்தில் சுண்டிக்குளம், முள்ளியான், போக்கறுப்பு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, வண்ணாங்குளம், கோவில்வயல், சங்கத்தார் வயல், முகாவில், கொற்றாண்டார்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள இது கேந்திரஸ்தானமாகும்.

இங்கு தந்தி வசதியோ, புகையிரத நிலையமோகிடையாது. வாடகைக் கார்களும் எட்டிப்பார்க்காத இடம். இப்பகுதியில் 7 பாடசாலை ஆசிரியர்கள் தினம் வந்து போவதும் அல்லாமல் பொது மக்களும், பாடசாலை மாணவ மாணவிகளும், மேற்குறித்த வட்டாரங்களிலுள்ள நோயாளிகளும் இந்தப் பஸ் வண்டிகளை நம்பியே பிரயாணம் செய்கின்றனர். ஆனால் இது விஷயங்களை இ. போ. ச. கவனக்குறைவாக விடுவது இடபகுதி மக்களுக்குப் பெரும் கவலையைத் தருகிறது. இதைவிட இப்பகுதியில் ஓர் இராணுவ முகாமும் உண்டு. இதைவிட கண்டி, அனுராதபுரம், திருகோணமலை, மன்னார் ஆகிய பகுதிகளிலிருந்தும், யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்தும் வரும், போகும் மீன் வியாபாரிகளும், தென்னந்தோட்ட முதலாளி-தொழிலாளிகளும், கரை வலைத் தொழிலாளர்களும், புகையிலை வியாபாரிகளும் சந்தை வியாபாரிகளும் வரும்-போகும் ஒருபிரதான நிலையம். முள்ளிப்பற்று கிராமச்சபை, ஓர் திருப்திகரமான பஸ் பிரயாணிகள் தங்குமிடமும் இவ்விடத்தில் அமைத்துள்ளது எனவேபொதுமக்களின் தேவையை பூர்த்தி செய்ய இ. போ. ச. பிரயாணிகளுக்குக் கஷ்டம்கொடுக்காமல் முக்கியமாக புகையிரத நிலையமில்லாதபடியால் இப்பகுதி மக்களின் பிரயாண வசதிக்காக கடுகதி பஸ் வண்டிகளோ, மற்றும் சாதாரண சேவை பஸ் வண்டிகளோ இதே இடத்தில் நிற்பாட்டி கூடியஅளவு இப்பகுதி மக்களுக்கு சேவை செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆ. முத்தையா
கி. மு. ச. காரியதரிசி
கோவில்வயல்.
இயக்கச்சி.

## வாஷிங்டனுக்கு ரயில்வே கோஷ்டி

புதுடில்லி, ஏப்ரல் 8

இந்திய ரயில்வே தூது கோஷ்டி ஒன்று இன்று வாஷிங்டனுக்குப் புறப்பட்டது.

உலக வங்கியிடம் 6 முதல் 7 கோடி ரூபாய் கடன் பெறுவது சம்பந்தமாக அது பேச்சு நடத்தும்.

## ஏர் இந்தியா

பம்பாய், ஏப்ரல் 8

ஏர் இந்தியா மாமூல் சேவை நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் ஆரம்பமாகியது. கடந்த மாதம் 18-ம் திகதி முதல் நெவிக்கேட்டர்கள் [illegible] விமான சேவை தடைப்பட்டிருந்தது.

# 'எம். பி. க்களின் சம்பள உயர்வை முழு மூச்சாக எதிர்ப்பேன்'

## வென்னப்புவ எம். பி.

"கொழும்பு, வெள்ளி

மந்திரிகளும், பாராளுமன்ற அங்கத்தவர்களும், தங்கள் சம்பளத்தை அதிகரிப்பதுபற்றி தற்பொழுதுள்ள நிலையில் சிந்திக்கக்கூடாது. தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு நாட்டுமக்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் சம்பள உயர்வைப்பற்றி எண்ணக்கூடாது. பாராளுமன்ற அங்கத்தவர்களுக்குச் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமெனத் தீர்மானம்கொண்டுவரப்பட்டால், நான் அதை முழுமூச்சாக எதிர்ப்பேன்."

யோகியானவில் நெசவு நிலையமொன்றை வென்னப்புவா எம் பி. திரு. பெஸ்டஸ் பெரேரா திறந்து வைத்துப் பேசும்போது கூறினர்.

திரு. பெரேரா தொடர்ந்து கூறியதாவது: இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக அரசாங்கமும் மக்களும் உழைத்து வருகின்றனர். இப்போதுள்ள பொருளாதார நிலைமையினால் நாட்டிலுள்ள பிரச்னைகளுக்கு உடனடியான தீர்வுகள் செய்யமுடியாமலிருக்கிறது. இவ்வித நிலையில் பாராளுமன்ற அங்கத்தவர்களின் சம்பளத்தை உயர்த்துவது உகந்ததல்ல. அரசியல் வருமானமுள்ள ஒரு தொழிலாக இருக்கக்கூடாது. அது நாட்டின் சேவைக்காக இருக்க வேண்டும். இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்காக உழைப்பதையே அரசியல்வாதிகள் கருத்தில் கொள்ளவேண்டும்.

இலங்கை தனக்குத் தேவையான ஜவுளியை விரைவில் இங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய நிலை உருவாகிவருகிறது. தேசிய அரசாங்கம் இதற்கான முழுமுயற்சிகளையும் செய்து வருகிறது. இந்த நாட்டுப்பிரஜைகள் இந்தநாட்டில் உற்பத்தி செய்யப்படும் துணியை அணிவதில் வெட்கப்படக்கூடாது.

# 'தமிழ் சட்ட விதிகளை செயற்படுத்த மனம் வேண்டும்'

## அரசாங்க அதிகாரி கருத்து

கொழும்பு, வெள்ளி

உத்தியோகத்தர்கள் பற்றுக்குறையினால் தமிழ் மொழி சட்டவிதிகள் அமுல் தடைப்படக்கூடும் எனத் தெரியவருகிறது.

திணைக்களங்களில் தமிழ் மொழி சட்டவிதிகள் அமுல் செய்யப்படும் சமயத்தில் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் பற்றி விரிவான முறையில் ஒரு அறிக்கையை பல திணைக்கள அதிபர்கள் திறைசேரிக்கு சமர்ப்பிப்பதற்காகத் தயாரித்துள்ளனர்.

திணைக்களங்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுடன் தமிழ்மொழிசட்ட அமுல் முதலில் நடாத்த முடியுமா என்பதை பரிசீலனை செய்து அதன்பின்னரே உத்தியோகத்தர்கள் பற்றுக்குறைபற்றி தமக்கு அறிவிக்கும்படி திறைசேரி ஒரு சுற்று நிருபத்தில் எல்லா நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் திணைக்கள அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

மூன்று மொழிகளிலும் தேர்ச்சிபெற்ற உத்தியோகத்தர்களை திணைக்களங்கள் பெறுவதில் கஷ்டம் நிலவி வருவதாகவும் பல திணைக்கள அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

'தமிழ்மொழி சட்ட விதிகள் அமுல்செய்வதில் ஒருவித கஷ்டமும் இருக்காது. விதிகளை செயற்படுத்துவதற்கு மனம்தான் வேண்டும்' என்று அரசாங்க உயர் அதிகாரியொருவர் கருத்துக் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

## சீர்திருத்த வேலைகள்

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் தெற்கு குளுந்தவேலி வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சீர்கேடடைந்திருந்த இவ்வீதியைத் திருத்துமாறு கரணவாய் தெற்கு கலாபடிப்பக மன்றம் உடுப்பிட்டி கிராமசபையிடம் மகஜர் மூலம் வேண்டிக்கொண்டதன் பேரிலேயே கிராமசபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இவ்வீதி . திருத்த வேலைக்கெனத் தற்பொழுது ரூபா 1500 ஒதுக்கப்பட்டுள்ளது.

## வாலிப முன்னணியின் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

சங்கீத ஆசிரியர் பரீட்சைக்குத் தகுதியானவர்கள் யாவரும் விண்ணப்பிக்கக் கூடியதாகவும், நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றக் கூடியதாகவும் அமைய அரசாங்க வர்த்தமானியில் புதிய விளம்பரமொன்று வெளியிடவும் அதுவரையிலும் நேர்முகப்பரீட்சையை பின்போடவும் கல்வித் திணைக்களத்துடன் ஆலோசிக்குமாறு சாவகச்சேரி வடக்கு வாலிபமுன்னணி, சாவகச்சேரி எம், பி. திரு. வி. என். நவரத்தினத்திற்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரியுள்ளது.

## புதுவருடம்

கொழும்பு, வெள்ளி

எதிர்வரும் புதன் கிழமை இலங்கையில் சிங்களவர்களும் தமிழர்களும் புதுவருடத்தை கொண்டாடுவார்கள்.

ஸ்ரீலங்கா பஞ்சாங்கத்தின்படி புதுவருடம் ஏப்ரல் 13ந் தேதி மாலை 5-45க்குப் பிறக்கின்றது.

13ந் தேதியும், 14ந் தேதியும் பஸ்-ரயில் போக்குவரத்துக்கள் போயாதினங்களைப் போலவே நடைபெறும். என்றாலும் காலிக்கும் காங்கேசன்துறைக்கு மிடையே விசேஷ ரயில் போக்குவரத்துக்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.

## நீவின் அமெரிக்கா செல்வார்

வாஷிங்டன், ஏப். 8

பர்மியத் தலைவர் நீவின் ஜனாதிபதி ஜோன்ஸனின் அழைப்புக்கிணங்க இவ்வாண்டு பிற்பகுதியில் அமெரிக்கா செல்வாரென வெள்ளை மாளிகை அறிவிப்பொன்று கூறியது.

## விஸா மறுப்பு

வார்ஸா, ஏப். 8

போலந்தில் கிறிஸ்தவ மதம் ஏற்பட்ட 1000ம் ஆண்டுக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள வெளிநாட்டு கிறிஸ்தவமதத் தலைவர்கள் வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள்போட்டி நடாத்தமுடிவு

சங்கானை, வெள்ளி

சங்கானை நிகரை வாலிப மன்றத்தினர் எதிர்வரும் 17-ந் திகதி விளையாட்டுப் போட்டியொன்றைநடாத்த தீர்மானித்துள்ளனர்.

வலி.மேற்கு பிரிவிலுள்ள 21 வயதிற்குட்பட்ட இளைஞருக்காக 15 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியொன்றும்அன்று நடைபெறும்.

---

# 'நாடகத்துறையில் வளர்ச்சி வேண்டும்'

மாங்குளம், வெள்ளி

'ஈழத்திலே நாடகத்துறை மிகவும் கணிசமான அளவு வளர்ந்துள்ளது. இந்நிலை மேலும் விருத்தியடைய வேண்டும். இதற்கு நாடக மன்றங்கள் வழி அமைக்க வேண்டும்.'

இவ்வாறு பாஷையூர் தேனருவி நாடக மன்றத்தின் இரண்டாவது ஆண்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய மன்றத்தின் போஷகரில் ஒருவரான திரு. மு. சிங்கராயர் கூறினார்.

இக்கூட்டத்தில் புதிய தலைவராக திரு. ஜி. ஜி. தேவதாசனும் செயலாளராக திரு. எஸ். சிவப்பிரகாசமும் பொருளாளராக திரு. ஜேக்கப்பும் தெரிவு செய்யப்பட்டனர். கழகப் போஷகராக 16-ம் வட்டாரப பிரதிநிதி திரு. ஜே. எஸ். அழகையா தெரிவு செய்யப்பட்டார். 6 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

# புதுவருட உத்தியோகத்தர்கள்

சுழிபுரம், வெள்ளி

வட்டுப்பிளவத்தை சனசமூகநிலையத்தின் பதினைந்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்நிலையமண்டபத்தில் நடைபெற்றது நடப்புவருட புதிய உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. மு. யோகநாதன், உபதலைவர்: திரு. ஆ. சண்முகவடிவேல், காரியதரிசி: திரு. கு. சிவஞானம், பொருளாளர்: திரு. க. குணரத்தினம். நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

# இளைஞர்கழகத்தின் 10-வது ஆண்டுவிழா

சுழிபுரம், வெள்ளி

சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சைக்கிள் மரதன் ஓட்டப்போட்டி ஒன்றை நடாத்த இளைஞர் முன்னேற்றக்கழகத்தினர் முடிவு செய்துள்ளனர். இப்போட்டியில் அயல் கிராமங்களிலுள்ள சைக்கிள் ஓட்ட வீரர்களை கலந்துகொள்ளுமாம் அழைப்புகள் விடப்பட்டுள்ளன. பத்தாவது ஆண்டுவிழா இம்மாதம் 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை கழக முன்றலில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

---

# 25 முறை சந்திரனைச் சுற்றியது

மாஸ்கோ, ஏப் 8

ரஷ்யாவின் 'லூனா 10' உபகிரகம் நேற்றுக் காலை வரை சந்திரனை 25 தடவை சுற்றி வந்ததாக அறிவிக்கப்பட்டது. இன்னும் அது தகவல்களை அனுப்பிக்கொண்டு வருகிறது. சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பே அது அதிகமாக விஞ்ஞானத் தகவல்களை அனுபபுகிறதாம்.




கிரிக்கெட்

# நல்லூர் கோஷ்டி வென்றது

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தெற்கு சனசமூக நிலையக்கோஷ்டிக்குப் யாழ். இளங்கோமன்ற கிரிக்கெட் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சனசமூக நிலையக் கோஷ்டியினர் 4 விக்கட்டுகளாலும் 5 ஓட்டங்களினாலும் வெற்றியீட்டினர்.

முதலாவது இனிங்சில் சனசமுகநிலையக் கோஷ்டியினர் சகல விக்கெட்டுகளையும்இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் வீரர் நவரத்தினம் 17 ஓட்டங்களையும், கா. இரகுநாதன் ஆட்டத்தை இழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர். இளங்கோ மன்றத்தினர் இவ்வாட்டத்தில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 66 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் துடுப்படிவீரர் சந்திரபோஸ் 11 ஓட்டங்களைப்பெற்றார். இரண்டாவது இனிங்சில் சனசமுகநிலையக்கோஷ்டியினர் 6 விக்கெட்டுகளைஇழந்து 54 ஓட்டங்களைப்பெற்றனர். இதில் இக்கோஷ்டியின் சிறந்த துடுப்படி வீரர்களான வேந்திரமூர்த்தி 33 ஓட்டங்களும், ம. பற்குணம் 26 ஓட்டங்களும், கா.இரகுநாதன் ஆட்டத்தை இழக்காமல் 6 ஓட்டங்களையும் பெற்றனர். இவ்வாட்டத்தில் இளங்கோ மன்றத்தினர் சகலவிக்கெட்டுகளையும் இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சனசமூக நிலையக் கோஷ்டியின் பந்தெறிவீரர் கா. இரகுநாதன் குறைந்த ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தியது பாராட்டுக்குரியதாகும்.

இப்போட்டி மேற்படி சனசமுகநிலைய மைதானத்தில் நடைபெற்றது.

---

# ஷைனிங்ஸ்டார் வென்றது

உடுப்பிட்டி, வெள்ளி

பருத்தித்துறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் துன்னாலை ஷைனிங் ஸ்டார் கோஷ்டிக்கும் துன்னாலை வடக்கைச் சேர்ந்த விவேகானந்தா விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் ஷைனிங் ஸ்டார் கோஷ்டி வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. கே. ரி. இராசசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

---

# சிறிமாவின் குறைபாடு

யக்காலை, வெள்ளி

அவசரகாலசட்டமும், பத்திரிகைத் தணிக்கையும் தற்பொழுது இருப்பதால, மக்களுக்கு நாட்டில் நடப்பவற்றை எதிர்க் கட்சியினரால் எடுத்துக்கூற முடியாமலிருக்கிறதென எதிர்க்கட்சித்தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கூறினார்.

---

# ஈஸ்டர் எழுச்சி வாழ்த்து

புதுடில்லி, ஏப்ரல் 8

அயர்லாந்தின் ஈஸ்டர் எழுச்சியின் 50-வது ஆண்டு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் ஐரிஷ் ஜனாதிபதி டி. வேலரா வுக்கு வாழ்த் [illegible] அனுப்பியிருக்கி[illegible]

# கலைமகளுக்கு வெற்றி

உடுப்பிட்டி, வெள்ளி

ஓடை கலைமகள் கோஷ்டிக்கும் நவிண்டில் ஸ்ரார் கோஷ்டிக்கும் ஸ்ரார் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கலைமகள் கோஷ்டி 39 ஓட்டங்களால் ஸ்ரார் கோஷ்டியை தோற்கடித்தது.

---

# வெற்றிதோல்வி இல்லை

உடுப்பிட்டி, வெள்ளி

ஓடை கலைமகள் கோஷ்டிக்கும் வதிரி பொம்பஸ், அல்வாய், மனோகரா தெரிவு கோஷ்டிக்கும் இடையில் வதிரி போம்பஸ் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

---

கைப்பந்தாட்டம்

# சிதம்பராக்கல்லூரி சாம்பியனாகியது!

வல்வெட்டித்துறை, வெள்ளி

வடமராட்சி ஆசிரிய சங்கத்தினரால் வடமராட்சி கல்லூரி மாணவர்களுக்கிடையே நடைபெற்று வந்த கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வடமராட்சிப் பகுதி சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் தலைமையில் நடைபெற்ற விழாவில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி சாம்பியன் வெள்ளிகிண்ணம் வழங்கப்பட்டது.

---

# இந்து இளைஞர் இயக்க 17வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்கத்தினரின் 17வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி விளையாட்டுப் போட்டிகள் அதிகாலையில் ஆரம்பமாகும்.

ஆண், பெண் சைக்கிளோட்டப் போட்டிகள் ஓட்டப்போட்டி உட்பட இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெறும். ஆண்களுக்கான 25 மைல் சைக்கிளோட்டம் யாழ். முற்றவெளியிலிருந்து ஆரம்பமாகித் திருநெல்வேலிச் சந்தி, கோண்டாவில், உரும்பராய்வழியாக வசாவிளான் ச்சுவேலி நோக்கித் திரும்பி வல்லைச்சந்தி வழியாக மேற்படி இயக்க மைதானத்தை வந்தடையும்.

பெண்களுக்கான ஐந்து மைல் சைக்கிளோட்டம் நல்லூர்கந்தசுவாமிகோயில் மேற்கு வீதியிலிருந்து ஆரம்பமாகி இயக்கமைதானத்தை வந்தடையும். மற்றும் ஐந்துமைல் ஆண்கள் மரதன் ஓட்டம் ஆகியனவும் இடம்பெறும்.

விளையாட்டுப் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதாக இணைச்செயலாளர் திரு. சி திருச்செல்வம் தெரிவித்தார். (நநி)

வியாபாரம் பெருக

# வரி விளம்பரம்

## தேவை

எமது தயாரிப்பிலுள்ள பொருட்களை விற்பனை செய்வதற்கு ஆண் - பெண் விற்பனையாளர்கள் தேவை. 13—4—66க்குமுன் வரவும். பாஸ்கரன் இன்டஸ்றீஸ் 44/3 கொலீச் லேன், நீர்வாவியடி, யாழ்ப்பாணம். (வசந்தா சேலை அச்சகத்துக்கு அருகாமை). 43

---

வாகனங்கள் திருத்துவதற்கு மின்நுட்பத் தொழிலாளர் தேவை. விபரங்களுக்கு கே. சண்முகம், 86, அவிசாவளைவீதி, வெல்லம்பிட்டியா. 42

---

கொழும்பில் ட்ருக்டர்கள் லோடேர்ஸ், புல்டோர்சேர்ஸ் முதலியவற்றில் வேலைசெய்வதற்கு மெக்கானிக்குகள் தேவை. பிரசித்திபெற்ற ஸ்தாபனங்களில் வேலைசெய்து பல கால அனுபவம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். விபரங்களுக்கு கே. சண்முகம், 86, அவிசாவளை வீதி, வெல்லம் பிட்டியா. 40

---

கொந்தருத்து முறையில் கொழும்பில் வேலைசெய்வதற்கு புல்டோசர் சாரதிகள் தேவை. மனுச்செய்வோர் ரொக்கமாக பிணைப் பணம் கட்டவேண்டும். கே. சண்முகம், 86, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியா. 41

---

கொந்தருத்து முறையில் கொழும்பில் உழவு மெசின் ட்ருக்டரில் மண் எடுத்துச் செல்வதற்கு ட்ருக்டர் சாரதிகள் தேவை. மனுச்செய்வோர் லாறிகள் ட்ருக்டர் லைசென்ஸ் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அத்துடன் ரொக்கமாக பிணைப்பணமும் கட்டவேண்டும். விபரங்களுக்கு: கே. சண்முகம், 86, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியா. 39

---

பெண்கள் சேவை இலங்கையில் பல பகுதிகளில் இம்மாதம் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் பெரும் சினிமா நட்சத்திர கலைநிகழ்ச்சிகளில் வெளியீட்டுமலர் டிக்கட் விற்பனைக்கு தேவை. பிரயாண, சாப்பாட்டு வசதிகளுடன் தினம் 7-50 கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும்; 27, மெயின் ஸ்றீற், யாழ்ப்பாணம். 23

## விற்பனைக்கு

நெசவாளர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். கைத்தறி சேலைகளுக்கு பூப்போடும் பற்றேன் (Pattern) புத்தகங்கள் எம்மிடமிருந்து வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம். எஸ். சவிரிமுத்து, 73, கே. கே. எஸ். றோட். யாழ்ப்பாணம். 36

---

ஹம்பர் சுப்பர் ஸ்னைப் (Humber Super Snipe) C L இலக்கத் தொடர்புடைய, நல்லநிலைமையிலுள்ள கார் விற்பனைக்குண்டு. 78000 மைல்கள் ஓடியது. நல்ல பாவனையிலுள்ளது. இரண்டாவது சொந்தக்காரரால் பாவிக்கப்பட்டது. விபரங்களுக்கு ஓட்டோஸ் லிமிட்டெட் யாழ்ப்பாணம். தொலைபேசி; 496. 45

---

ஒரு (Junior Wolseley) தண்ணீர் பம்பு, வண்டி, பைப்புடன் நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. யாழ்ப்பாணம் Autos கம்பெனியில் பார்வையிடலாம். அல்லது விளம்பர இல. 28 ஈழநாடு, மே. / பா. என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 28

---

நான் கண்ட பாரதி ஆராய்ச்சிக் கட்டுரைகள், விலை 3-75 கிடைக்குமிடங்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை 234, K. K. S. றோட், யாழ்ப்பாணம். செல்வன் N. C. A. வரதன், கம்பன் கலைப்பண்ணை மூதூர். 3. V. P. P. மூலம் பெற்றுக்கொள்ளலாம். 29

---

மாங்குளம் ஸ்டேசன் றோட்டில் இரும்புச் சாமான்கள் தளபாடங்களுடன் விற்பனைக்கு இருக்கின்றன. விரும்பியவர்கள் நேரில் வந்து சந்திக்கவும். இ. ஆ. சுப்பிரமணியம். 27

---

கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு எதிராக உள்ள 5 பரப்புக் காணியும் பூநகரியில் 20 ஏக்கர் நெற்காணியும் ஓமந்தையில் 8 ஏக்கர் காடும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும், 184, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 47

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு

கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## காணவில்லை

ஒரு கடுதாசிப் பையுடன் ரெக்கண்டைல் பாங் செக் புத்தகம், கார் ரெஜிஸ்ரேசன் புத்தகம், (E L 1177) சாரதி லைசன்ஸ், சில ரசீதுகள் முதலியன பெரியகடையடியில் தொலைந்துவிட்டன. கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் சமர்ப்பிப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். 44

---

தபால்தந்திப்பகுதிக்கு

# 8,646 1/2 கோடி வருமானம்

கொழும்பு, வெள்ளி

தபால்தந்திப் பகுதிக்கு 1963—64 வருடத்துக்கு ரூ. 8,646 கோடி 60 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

தபால் தந்திப் பகுதியால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிலே மேற்கண்டவிபரம்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தவருமானம்முன்னைய ஆண்டுகளைவிட 376 கோடி 90 லட்சம்ரூபாய் கூடுதலானதென அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

தொலைபேசிமூலம்2 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# நேரோவின் யோசனை

அத்தனகலை, சனி

படமாளிகைகளும், இறைச்சிக் கடைகளும் போயாதினங்களில் மூடப்படவேண்டுமென்றும், இவ்விதம் மூடப்பட்டால்தான் மக்கள் சமய வழிபாட்டில் ஈடுபடக்கூடிய சூழ்நிலை ஏற்படுமென்றும் கம்பஹா சிறிசுனந்த பாடசாலையின் பரிசளிப்புவிழாவில், பன்னசிக நேரோ பேசும்போது கூறினார்.

---

# அரசாங்கத்துக்கு ஆர். ஜி. பாராட்டு

அத்தனகலை, வெள்ளி

தற்பொழுதுள்ள அரசாங்கத்தைப்பற்றி சிலர் தவறாக கூறியபோதிலும், இந்த அரசாங்கம் எல்லாத் தொகுதி வேலைகளையும் பாரபட்சமின்றிச் செய்துவருகிறது என அளவையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தம்பதெனிய எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்திலே இவ்விதம் நடப்பதைப் பார்க்க அவருக்கு எப்படி இருக்கும் என்று பலபல எண்ணங்கள் என் மனதில் ஓடின.

ஏன் இவ்வித நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்குசெய்யவேண்டுமென்று காரியதரிசியைக் கேட்டேன். மாணவர்களைத் திருப்திசெய்யவே தாம் இப்படிச்செய்ததாயும், இல்லாவிட்டால் தேர்தலில் தமக்கு ஆதரவிராதென்றும் அவர் சமாதானம் கூறினர்.

கர்நாடக சங்கீதத்திலே போதிய விறுவிறுப்பு இல்லை என்றும், மாணவர்கள் விறுவிறுப்பான புதிய மெட்டுகளையே விரும்புவதாகவும் ஓர் அன்பர் கூறினர். இதைப்பற்றி விசாரணை செய்து குறைகளை நீக்கி, மாணவர் ரஸிக்கும்முறையில், தமிழ்க் கலைகளை வளர்க்கவேண்டியது அவசியமாகும்.

ஃ ஃ ஃ

கலைஞர்களுக்கு மட்டுமன்றி, பேச்சாளருக்கும் தமிழகத்தில் சன்மானம் அளிக்கும் ஒரு நல்ல வழக்கம் வளர்ந்துவருகின்றது. அண்ணாமலையிலே அறிஞர் அண்ணா சமீபத்தில் வந்திருந்தாராம். சென்னையிலிருந்து அவருக்கு வந்துபோக மோட்டார்ச் செலவு கொடுத்ததுடன், இருநூறு ரூபாய் சன்மானமும் அளிக்கப்பட்டதாம். சபாஷ்!

நமது உடுப்பிட்டியார் அண்ணாமலையிலே வெளிநாட்டு மாணவர் சங்க விழாவில் கலந்துகொள்வதாகச் சென்றூர். ஆனல் அங்கு அவரை மூன்றுகூட்டங்களில் பேசும்படி செய்து சன்மானமும் அளித்ததாயும், ஆனல் அவர் அதைப் பெருந்தன்மையுடன் வாங்க மறுத்துவிட்டதாயும் அறிந்தேன். ஆனல் அவர் மறுத்திருக்கத் தேவையில்லை.

இலங்கையிலும் பேச்சாளருக்கு சன்மானம் வழங்கும் பழக்கம் ஏற்படவேண்டும். இங்கு ஒரு கூட்டத்துக்கு பேச்சாளரொருவரை ஒழுங்குசெய்திருந்தனர். அவர் வரவில்லை. பலருக்கும் ஏமாற்றம். "ஒரி" யானதால் ஏன் வரவில்லை என்று அவரைக் கேட்கவும் வாயில்லை. பேச்சாளருக்கு சன்மானமளிப்பதாயின், பலரும் உற்சாகத்துடன் முன்வருவதுடன், பேச்சுக்கலையும் வளரக்கூடுமல்லவா?

ஃ ஃ ஃ

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் அங்கு படிக்கும் வெளிநாட்டு மாணவருக்கு ஒரு விசேஷ ஏற்பாடு செய்துள்ளனராம். அம்மாணவர் அங்கு பல இடங்களுக்கும் உல்லாசப்பிரயாணம் செய்து சுற்றிப்பார்க்க வருஷத்தில் ஐநூறுரூபாய் அனுமதித்திருக்கிறூர்கள். சில வாரங்களுக்குமுன் அங்கு படிக்கும் நம்மாணவர்கள் திருப்பதி முதலிய இடங்களுக்கும் சென்றுவந்தனராம்.

அச் சர்வகலாசாலையில் நூல் நிலையத்தைப் பார்த்தேன். அந்தக் கோவிலுக்குள் எவ்வளவு வசதி. எவ்வளவு அமைதி. எவ்வளவு அருமை நூல்கள் உள்ளன! அம்மாணவர் அதிர்ஷ்டசாலிகள். டாக்டர் ஸி. பி. ராமசாமி ஐயரின் பெயரால் இயங்கும் அந்த நூல்நிலையம் அச்சர்வகலாசாலைக்கே பெருமையளிக்கிறது. நூல்நிலைய அதிபர் ராவ் அவர்கள் மிக அன்புடன் அளித்துச் சென்று அங்கு ஏற்படுத்தியுள்ள அபிவிருத்திகளை விளக்கினுர். அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து இங்குள்ள பொதுசன நூல் நிலையத்தையும் அவ்விதம்அமைக்க யோசனை கூறுமாறு கேட்கலாம்.

இன்னும் அங்கு பார்க்க வேண்டியவை பலவுண்டு. நேரம் தானில்லை. மொத்தத்தில் அண்ணாமலைசர்வகலாசாலை தமிழகத்துக்குப் பெருமை அளிப்பதுடன்நம் ஈழத்துக்கு அது உரிமையானதென்ற உணர்ச்சியுடன் திரும்பினேன்.

விண்ணயன் மாடம் விளங்கொளிவீதி வெண்கொடியெங்கும் விரிந்திலங்க, நண்ணி சீர்வளர்காழி நற்றமிழ் ஞானசம்பந்தன் பெண்ணின் நல்லாளொரு பாகமமர்ந்து பேணிய வேட்களமேல் மொழிந்த, பண்ணியல் பாடல் வல்லார்கள் பழியொரு பாவமிலாரே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்

S. R. S.
ஜவுளி மாளிகையில்
C. W. E. புடவைகள்

கூ.மொ.வி.ஸ்தாபனத்தாரின் புடவைகள் 97-ம் இலக்க கூப்பனுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

எஸ்.ஆர்.செல்லத்துரை
(கூ. மொ. வி. அங்கீகாரம் பெற்ற புடவை வர்த்தகர்)
216, கே.கே.எஸ். ரேட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

## ரூ. 10கோடிசெலவில் டெலிபோன் சேவை

கொள்ளுப்பிட்டி, வெள்ளி

இலங்கையின் நவீனவசதிகளைக்கொண்ட டெலிபோன் சேவையை அமைப்பதற்கு இப்பொழுது லண்டனிலுள்ள தபால், தந்தி அமைச்சர் மொண்டேகு ஜயவிக்கிரமா ஏற்பாடு செய்துவருவதாகஇங்கு தகவல் கிடைத்துள்ளது. புதிய திட்டத்துக்கு பத்துக்கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## பாதுகாப்புசபை கூட்டம் இல்லை

நியுயோர்க், ஏப். 8

ரொடீஷியா சம்பந்தமாக ஐ. நா. பாதுகாப்பு சபையை அவசரமாக கூட்டும் பிரிட்டனின் முயற்சி கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புசபைத் தலைவர், பிரிட்டிஷ் தீர்மானத்தைவிட கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அடிப்படையில், ஆசிய-ஆபிரிக்க நாடுகளுடன் பேச்சு நடத்தினர்.

## ஆண்டறுபது...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ருத- கி. வா. ஜ. அவர்களைப் பற்றி நினைக்கும்போது நீரின் தண்மையும் இனிமையும் நம்உள்ளத்திடை எழாதிருக்கமுடியுமா?

பருத்த அரையையுடைய முதிர்ந்த மாமரத்திலே புதிய முறையிலே ஒட்டப்பட்டமாந்துளிர்கள் முதிர்ந்து பல்சுவை மாங்கனிகளைத் தந் தின்புறுத்துவதுபோல தமிழின் பல துறைகளிலும் தம் ஆற்றலை வெளிப்படுத்தித் தமிழுலகைத் தமக்குக் களப்படுத்தியுள்ளார். ஆண்டறுபதைப்பூர்த்தி செய்யும் இவ்விளைஞர். கதையோ, கவிதையோ, காவிய விமர்சனமோ, திருமுறைவிளக்கமோ, செந்தமிழின் சுவையோ— இப்படி எத்துறையாகட்டும். அத்துறைகளி லெல்லம்புகுந்துபுதுமை விளைத்தவர் இப்பெரியார். கதைவரிசையிலே 'மழலைச் சிலம்பு' சமய ஆராய்ச்சித் துறையிலே 'ஆடும் பெருமானும்' இடம்பெறச் செய்த கி.வா ஜவின் நாற்றண்டு விழாவையும் தமிழகம் கண்டு களி கூருவதாக வாழிய செந்தமிழ்; வாழ்க ஜகந்நாதன்.

## தேசீய சுவீப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 181-50 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 04 O 0273 | 05 S 0549 |
| 09 P 0531 | 13 H 0852 |
| 08 A 0323 | 03 E 0429 |
| 07 X 0601 | 06 B 0236 |
| 04 L 0243 | 06 L 0803 |
| 13 N 0239 | 10 L 0964 |
| 14 M 0557 | 15 R 0060 |
| 14 A 0561 | 14 D 0567 |
| 11 X 0915 | 05 N 0471 |
| 05 L 0721 | 15 E 0236 |
| 14 X 0710 | 15 L 0489 |
| 12 P 0513 | 01 G 0287 |
| 05 K 0980 | 08 W 0537 |
| 11 O 0670 | 04 W 0485 |
| 01 T 0416 | 04 N 0131 |
| 07 J 0168 | 15 K 0154 |
| 07 A 0874 | 15 C 0437 |
| 01 K 0971 | 01 U 0605 |
| 06 H 0313 | 07 J 0022 |
| 07 Z 0796 | 15 L 0516 |
| 10 X 0139 | 04 L 0146 |
| 11 D 0188 | 04 R 0577 |
| 10 T 0254 | 02 Y 0036 |
| 16 D 0203 | 01 S 0523 |
| 03 Q 0397 | 04 C 0758 |
| 02 D 0808 | 12 S 0398 |
| 07 T 0574 | 11 O 0856 |
| 02 A 0406 | 12 B 0789 |
| 08 K 0411 | 05 P 0441 |
| 10 C 0427 | 13 X 0984 |
| 04 W 0091 | 12 Y 0188 |
| 04 E 0910 | 06 J 0653 |
| 09 A 0886 | 12 L 0031 |
| 01 W 0324 | 03 Z 0175 |
| 13 K 0801 | 13 P 0440 |
| 04 D 0469 | 10 Z 0474 |
| 06 Q 0290 | 05 R 0353 |
| 12 S 0688 | 07 L 0821 |
| 13 Z 0816 | 01 F 0208 |
| 11 G 0537 | 07 G 0910 |
| 02 U 0911 | 07 M 0449 |
| 11 E 0749 | 01 W 0850 |
| 11 Q 0957 | 08 U 0496 |
| 12 D 0519 | 05 G 0588 |
| 08 Q 0426 | 14 T 0567 |
| 09 E 0584 | 08 X 0455 |
| 13 G 0781 | 15 B 0102 |
| 04 S 0232 | 10 P 0492 |
| 14 W [illegible] | 14 A [illegible] |
| 01 S 0305 | 11 H 0658 |

## 600 புதிய கார்கள் இறக்குமதி செய்யப்படும்

கொள்ளுப்பிட்டி, வெள்ளி

600புதிய மோட்டார் கார்களை இறக்குமதிசெய்வதற்கு அனுமதியளிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இந்த 600 கார்களில் 200கார்கள் மந்திரிகள், பார்லிமெண்ட் அங்கத்தவர்கள், சுப்ரீம் கோர்ட் நீதியரசர்கள் ஆகியோரின் உபயோகத்துக்கு அனுமதிக்கப்படும்.

மிகுதி 400கார்களும் அபிவிருத்தித்திட்டங்களின் உபயோகத்துக்கும் தோட்ட முதலாளிமாரின் உபயோகத்துக்கும் அனுமதிக்கப்படுமாம்.

## இந்திரா

புதுடில்லி, ஏப்ரல் 8

பாகிஸ்தான், டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை மீறியிருப்பது குறித்து ரஷ்யப்பிரதமர் கோஸிஜினுடன் தாம்பேசியதாயும், இதுசம்பந்தமாக பாகிஸ்தானுக்கு தாங்கள் வருத்தத்தைத் தெரிவிக்க ரஷ்யா, பிரதிநிதி ஒருவரை ராவல்பிண்டிக்கு அனுப்பியிருக்கிறது என்றும் பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்தார்.

## பிரதமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இந்த ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்காக விசேஷ ரயில், பஸ் போக்குவரத்துச் சேவைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன, காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா, உள்நாட்டு மந்திரி டாக்டர் தஹநாயக்கா, தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் உட்படப் பலர் பங்குகொள்ள விருக்கிறூர்கள்.

## அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம், சனி

நாவாந்துறை 17-ம் வட்டாரத்தில் அர்ச் பரலோக மாதா கோவில் மைதானத்தில் அரசாங்கத்தின் ஆதரவில் நிறுவப்படவிருக்கும் நெசவு நிலையத்திற்கு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நாளைக்காலை அடிக்கல் நாட்டுவார். இதற்கான ஒழுங்குகளை நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையம் மேற்கொண்டுள்ளது.

## தபால் இலாகாவில் கிடைத் தலாபம்

கொழும்பு, சனி

1963-64-ம் ஆண்டில் தபால் தந்தி இலாகாவில் 8646 கோடி 60 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## சிங்கப்பூர் பிரதமர்

சிங்கப்பூர், ஏப். 8

சிங்கப்பூர் பிரதமர் லீ குவான்யூ இரண்டுமாத வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணததை மேற்கொள்ளவிருக்கிறூர்.

கம்போடியா, தாய்லந்து லண்டன் ஆகிய இடங்களுக்கு அவர் செல்வார். லண்டனில் பிரிட்டிஷ்தளம் பற்றி அவர் பேசுவார்.

## அழகுராணியைக் காணவில்லை

எல்பிட்டியா, வெள்ளி

சன்னஸ்ஹமா பகுதியில் கடந்தபுதுவருட தினத்தின் போது அழகு ராணியாகத் தெரிவுசெய்யப்பட்ட 16 வயது பீயசிலிபத்திரா மார்ச்மாதம் முதலாம்தேதியிலிருந்து காணமற்போய் விட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர் காணமற்போய்விட்டதுகுறித்து நாடெங்கிலுமுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

காணமற்போனஇளம்யுவதியைக் கண்டுபிடிப்பதில், பொலிசார் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த யுவதி காணமற்போனது சம்பந்தமாக தோட்டத்துச் சுப்பிரின்டன் ஒருவர் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு பலப்பிட்டி மாஜிஸ்திரேட் திரு. எம். பி. ஜி. திஸநாயக்கா முன் விசாரணைக்காக ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

## பிரித் பாராயணம்

கொழும்பு. சனி

"சிங்கள-தமிழ் புதுவருடத்தையொட்டி கலாசாரப் பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரித் பாராயனம் இன்று இரவு 9-30 மணியளவில் சுதந்திர மண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது. இந்த வைபவத்தில் மல்வத்தை அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்த பிக்குகள் கலந்துகொள்ளுவார்கள். நாளையதினம் சுமார் 100 பிக்குகளுக்கு அன்னதானம் கொடுக்கவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

பௌத்த காங்கிரஸ் நிலையத்திலிருந்து பௌத்த சின்னங்களை ஊர்வலமாக எடுத்துச்செல்லவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. அப்புனித சின்னங்களை ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சுதந்திர மண்டபத்தின் வாயிலில் வரவேற்பார்.

வாடகைக்கு

மூத்திரைச்சந்தை, ஆசிரிய கலாசாலை ஆகியவற்றிற்குச் சமீபமாக, மின்சாரம் கிணறு முதலிய வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: 17, செம்மணி வீதி, நல்லூர். 48

கூ. மொ. வி. ஸ்தாபனத்தாரின் புடவைகள்
கூப்பனுடன் கட்டுப்பாட்டு விலைகளுக்கே
பெற்றுக்கொள்ளலாம்.
இத்துடன்
எமது சொந்த தறிகளில் தயார் செய்த
கைத்தறிச் சேலைகள்
மலிவு விலைகளில் கிடைக்கும்.
சண்முகானந்தா
ரெக்ஸ்ரைல்ஸ்
58, பெரியகடை, போன்: 7232 யாழ்ப்பாணம்.

(C. W. E.)கூ. மோ. வி.ஸ்தாபனத்தாரின் புடவைகள்
97-ம் இலக்க கூப்பனுக்கு கட்டுப்பாட்டு விலைக்கே
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(1 கூப்பனுக்கு 1 சேலையும் கிடைக்கும்)
த. குமாரசாமி
44, பெரியகடை, — யாழ்ப்பாணம்.
போன்: 7034

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org